# நீதி எல்லோருக்கும் சமமாக வேண்டும்



அப்பாவிகளுக்கு ஒரு நீதி அரசியல்வாதிகளுக்கு ஒரு நீதியா ? அரசாங்கத்தின் இரட்டை வேடம் என்று அண்மையில் பினாங்கு துணை முதல்வர் பி.இராமசாமி மிகக் காட்டமாக கேள்வி எழுப்பியதை படித்தேன். அந்த செய்தி நாட்டின் உண்மையான நிலவரத்தை காட்டுகிறது.

சட்டத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் வாதிகள் தங்கள் விருப்பம் போல் செயல்படுகிறார்கள். இன்று சாதாரண மக்களின் நிலை, அவர்களை விரல் நீட்டி கேள்வி எழுப்பி எள்ளிநகையாடும் அளவுக்கு இருக்கிறது.

அப்பாவி மக்கள் தெரிந்தோ தெரியாமலோ ஒரு சிறு தவற்றை செய்து விட்டால் உடனே அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் அதே தவற்றை அரசியல் வாதிகளும் அமைச்சர்களும் செய்தால் கண்டும் காணாமலும் போய் விடுகிறார்கள்.

பேரங்காடியில் பசிக்காக ஒரு ரொட்டி திருடிய ஒருவரை கைவிலங்கிட்டு காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லும் அளவுக்கு சட்ட ஒழுங்கை நிலை நாட்டும் காவல் துறை, அரசியல் வாதிகள் செய்யும் தவறுகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்காதது ஏன்?

நீதியின் கண்கள் அரசியல் வாதிகளுக்கு திறக்காதா? அப்பாவிகள் மட்டும் தண்டிக்கப்படுவார்களா? இது போன்ற இரட்டை வேடம் களையப்பட்டால் தான் சட்டத்தின் மீதும் நீதியின் மீதும் நீதிமன்றத்தின் மீதும் மக்களுக்கு முழுமையான நம்பிக்கை பிறக்கும்.

இதனிடையே முஸ்லிம் அல்லாதவர்களின் வழிபாட்டுத் தலங்கள் அணுக்கமாக கண்காணிக்கப்பட வேண்டும் என்று தேசிய ஒற்றுமைத்துறை அமைச்சர் டத்தோ அலிமா ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தார். நமது வழிபாட்டு தலங்களின் பொறுப்பாளர்களுக்கும் இது உரியது என்றாலும் ஒற்றுமைத் துறை அமைச்சர் முஸ்லிம் அல்லாதார் வழிபாட்டுத் தலங்கள் என்று சொல்வதை விட அனைத்து இன வழிபாட்டுத் தலங்கள் என்று சொல்லி எங்கு தவறு நடந்தாலும் அதை தடுக்க முயல வேண்டும்.

- மா.தமிழன்பன்,
சித்தியவான்.

Malaysia Nanban, pg 15, 12 Okt 2020

Akhbar : Malaysia Nanban

Tarikh : 12 Okt 2020

Muka surat : 15

Tajuk : **Keadilan harus sama untuk semua**

Ringkasan : Patutkah keadilan yang tidak samarata bagi rakyat biasa dan ahli politik diamalkan? Kenyataan yang dikeluarkan oleh Prof Ramasamy yang mengatakan 'kerajaan yang bertalam dua muka' amat sesuai bagi situasi yang kita hadap sekarang. Rakyat biasa dikenakan hukuman serta-merta jika mereka melakukan kesalahan, tetapi mengapakah ahli politik tidak dikenakan hukuman yang setimpal dan secepat? Kepercayaan pada peraturan dan mahkamah akan dilahir dalam diri rakyat hanya jika sikap kerajaan bertalam dua muka disingkir dan keadilan yang samarata dilaksanakan. Menteri Perpaduan Negara, Datuk Halimah, pernah mengumumkan kenyataan untuk mengawasi rumah ibadat bukan islam. Saya hormati pengumuman ini, tetapi ia lebih elok jika dikatakan semua rumah ibadat dan bukan hanya rumah ibadat bukan islam sahaja.